பிஸ்மில்லாஹி.

மெய்ஞ்ஞானசொரூபராகிய தக்கலைப்

# பீருமுகம்மதுசாகிபு

அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானரத்தினக் குறவஞ்சி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

# ஞானரத்தினக் குறவஞ்சி.

## காப்பு.

பொன்னுலகு பொருந்துமணப் பொருளறியத் தனைமரிய, மின்னுலகில் மெய்ஞ்ஞானம் விளங்ககுற வஞ்சிதனை, உன்னுமத் தன்னினைவி னுன்னியுநிப் பொருநான்காய்த், தன்னிறையைத் தன்னினைவாய்த் தரிப்பதுவே காப்பாமே

ஆதிக்குமுன்ன மநாதியுமென்னடி சிங்கி
அந்தக்கருங்குழி முந்தவிருளறை சிங்கா ௧

ஆதியாவந்த வரும்பொருளேதடி சிங்கி அது
சோதியிலாதி சொரூபமாயெழுந்தது சிங்கா ௨

சோதியிலாதி சொரூபமானதெப்படி சிங்கி அது
வேதமாய்முப்பொரு ளொன்றாய்முடிந்தது சிங்கா ௩

முப்பொருளென்றுநீ முன்சொன்னதாரடி சிங்கி அது
அப்பனுமாயி பாதையால்நாமடா சிங்கா ௪

எப்படியுலகத்தி லிப்படியுருவானேனும் சிங்கி அது
அப்பன்தன்னட்புக்கு வொப்பியதாயாலே சிங்கா ௫

பராபரத்தினிற் பஞ்சவன்னமேது சிங்கி அது
வேராகித்தூரான விந்துநிறமடா சிங்கா ௬

ஒன்றுக்குளைவர்க ளுண்டானதெப்படி சிங்கி அது
வொன்றுடே யொன்றாக வோடியிணைந்தது சிங்கா ௭

மூலக்குகைக் குள்ளே முச்சுடரேதடி சிங்கி அது
நாதத்திலைம்பூத மன்பாயுதித்தது சிங்கா ௮

மூலக்குகையெனுங் கோட்டைக்கரசரியார் சிங்கி அது
முப்பொருளொன்றாய் முடிந்தநினைவடா சிங்கா ௯

மூலக்கிழங்கு முளைத்திடமெவ்விடஞ் சிங்கி அது
நாதத்திலான நடுநிலையல்லவோ சிங்கா ௧௦

முன்னேமுனையாய் முளைத்திடமெவ்விடம் சிங்கி அது
மூலை முனையிரு கண்மணிகளல்லவோ சிங்கி ௧௧

பின்னேயுருவாய் முடிந்திடமெவ்விடம் சிங்கி அது
பெண்ணாணுமாகப் பிறந்ததலமடா சிங்கா ௧௨

இந்தவுடலுக்கு வேரென்ன தூரென்ன சிங்கி அது
இந்தவுடலுக்கு ராதிமூலமே சிங்கா ௧௩

இந்தவுடலுக் குயிர்வந்ததெப்படி சிங்கி அது
தொந்திநடுக்குழி தொப்பூழ்வழியடா சிங்கா ௧௪

இந்தவுடலுக் குயிரெங்கேநின்றது சிங்கி
அந்தரமாயண்ட மாக்கொடிநின்றது சிங்கா ௧௫

இந்தவுடற்கனி யெந்தகொடிக்கனி சிங்கி அது
முந்தியதொப்பூழு மாககொடியல்லோ சிங்கா கசு
மாகநொடியென்பதைமானிடரென்சொன்னார் சிங்கி அது
மட்டிலடங்காத மாகலிமரவடா சிங்கா கஎ
எந்தவழியினால் வந்தோமுலகினில் சிங்கி அது
வெல்லாமுடிந்த பொருள்வழியடா சிங்கா கஅ
முன்னேயறிவா லறிவகையென்னடி சிங்கி அது
முச்சுடர்மூன்று முடலுயிராத்துமாக சிங்கா ககூ
பின்னேரறிவார்க ளொன்றானதெப்படி சிங்கி அது
பேதகமற்ற பெருவெளியானது சிங்கா உ0
ஆசைகொண்டுநம்மை யாட்டுறதாரடி சிங்கி அது
அக்கினிவாயுநீர் மண்ணின்மகிமையே சிங்கா உக
ஆசைபாசபல னனுபோகமாரடி சிங்கி அது
அங்கம்பொருந்திய பங்குமண்ணல்லவோ சிங்கா உஉ
தன்னையறியுக் தலமேதுசொல்லடி சிங்கி அது
கண்ணிடையான நடுநிலையல்லவோ சிங்கா உ௩
என்னவிதமாகத் தன்னையறிவது சிங்கி அது
தன்னவன்றாய்தந்தை யாகிநாமானது சிங்கா உச
இறையையறிவது எப்படிச்சொல்லடி சிங்கி அது
இறையெங்குநின்றாடிடுந் தன்னினைவாகுமோ சிங்கா உரு
தன்னுள்விளங்குந் தவமென்னடிசொல்லடி சிங்கி நீ
தன்னைமறந்து தவத்திலிருப்பது சிங்கா உசு
என்னவிதமாகத் தன்னைமறப்பது சிங்கி
யொன்றைப்பொருந்தி யொடுங்கியிருப்பது சிங்கா உஎ

என்னவிதமாக வொன்றைப்பொருந்தலாம் சிங்கி அது
எல்லாமறந்து யிருளாயிருப்பது சிங்கா ௨௮
ஒன்றென்றுசொன்ன வுயிர்நிலையென்னடி சிங்கி அது
உன்னுலுதிப்பல முன்னுல்நினைவடா சிங்கா ௨௯
கன்னியெழுந்து கலந்திடமெவ்விடஞ் சிங்கி சில
முன்னியெழுந்த வுயிர்நிலையல்லவோ சிங்கா ௩0
எங்கும்பரந்த பெரும்பொருளென்னடி சிங்கி அது
அங்கிங்குமெங்கு மகண்டபெருவெளி சிங்கா ௩௧
அண்ணிணுமெண்ணுமழியாப்பொருளென்னசிங்கி யிரு
கண்ணையுமூட விருளழியாப்பொருள் சிங்கா ௩௨
ஆங்காரவுடலுக்கு ஆணியாவென்னடி சிங்கி அது
ஓங்காரமூலத்தி னுள்ளொளியல்லவோ சிங்கா ௩௩
ஆணியாய்வந்த வரும்பொருளென்னடி சிங்கி முன்
தோணியசற்குரு முதனுமமல்லவோ சிங்கா ௩௪
இந்தப்பொருள்வந்த தெந்தவழியடி சிங்கி அது
அந்தக்கதிர்பதி வந்தவழியடா சிங்கா ௩௫
கத்தனொளிவுல கலந்திடமெவ்விடம் சிங்கி வழி
யத்தநடனந்தா னுடியதற்பரஞ் சிங்கா ௩௬
உத்தபொருளுக் குயிரெழுத்தென்னடி சிங்கி அது
நச்சரவாடு நடுநிலையல்லவோ சிங்கா ௩௭
எட்டெழுத்தாக வெழுந்தெழுத்தென்னடி சிங்கி அது
மட்டிலடங்கா வடிவட்டகோணமே சிங்கா ௩௮

அஞ்செழுத்தாக சுமைந்தெழுத்தென்னடி சிங்கி அது
அஞ்சும்பொருந்திய ஆகாயவட்டமே சிங்கா ௩௯
அன்பத்தோரட்சர மறியநீசொல்லடி சிங்கி அது
வஞ்சமகார நடுச்சுழிமூன்றமே சிங்கா ௪0
கற்பகவாசி கலந்திடமெவ்விடஞ் சிங்கி அது
உற்பனமூலத்தி னுள்ளொளிவல்லவோ சிங்கா ௪௧
சத்தம்பிறந்திடுஞ் சற்குருவேதடி சிங்கி அது
உற்றசுவாச முயிர்நிலையல்லவோ சிங்கா ௪௨
கண்டுதொழுஞ்சிவ காரணமேதடி சிங்கி நம்மை
யுண்டுபடுத்திய வுள்ளொளிவானதே சிங்கா ௪௫
எப்படிக்கண்டு யிறையைவணங்கலாம் சிங்கி அது
நட்புடன்றெண்டு நடுநிலைகாண்பது சிங்கா ௪௪
நடுநிலையானதை நாடுறதெப்படி சிங்கி அது
நாட்டந்தேட்டமோட்ட மாட்டமொன்றுனுகில் சிங்கா
தேட்டமுநாலுந் திருந்துறதெப்படி சிங்கி அது
திருவைப்பொருந்தி யொருமித்திருப்பதே சிங்கா ௪௬
ஒருமிததிருக்கின்ற வேரிடமெவ்விடஞ் சிங்கி அது
வொன்றுமிரவும் பகலுமுதிப்பிடம் சிங்கா ௪௭
இரவும்பகலுமொன் றுனதுமெவ்விடம் சிங்கி அது
யெப்போதுமிருளா யிருப்பதுமூலையே சிங்கா ௪௮
சரடம்பகலும் பிறப்பிடமெவ்விடம் சிங்கி அது
யிருளிலுதித்துன்னி வந்தடிமூலம் சிங்கா ௪௯
இரவும்பகலு மெழுந்திடமெவ்விடம் சிங்கி அது
யேகாந்தஉன்னலைவங் தேறியதாமரை சிங்கா ௫0

இரவும்பகலும் பிரிந்திடமெவ்விடம் சிங்கி அது
யெழுந்தறுகோணை மிடம்வலம்வாசியே சிங்கா ௫௧

இரவும்பகலும் நின்றாடியதெவ்விடம் சிங்கி அது
யெழுந்துநின் றுடுஞ்சுழிமுனைமண்டலம் சிங்கா ௫௨

இரவும்பகலு மிருப்பிடமெவ்விடம் சிங்கி அது
யீராறுமோடிய வோரானநான்கடா சிங்கா ௫௩

இரவும்பகலு முதிப்பிடமெவ்விடம் சிங்கி அது
மேறுமெட்டங்கல மிருவிழிநடுநிலை சிங்கா ௫௪

இரவும்பகலென் று யென்னத்தைசொல்லலாம்சிங்கி அது
யிரவும்பகலிட பின்கலைவாசியே சிங்கா ௫௫

இடகலைபின்கலை யென்னத்தைசொல்லலாம் சிங்கி அது
இடகலைசந்திரன் பின்கலைசூரியன் சிங்கா ௫௬

என்னத்தைச்சொல்லலாம் சந்திரன்சூரியன் சிங்கி அது
இடவலமாக வெழுத்தோடுமூச்சடா சிங்கா ௫௭

சந்திரன்சூரிய னென்றுணதெவ்விடம் சிங்கி அது
கலையும்பொருந்து நடுச்சுழிமுனையே சிங்கா ௫௮

என்னத்திலேபால மேறிநின்றுடுது சிங்கி அது
உன்னுக்குள்வாசி நடனப்புரவிமேற் சிஙகா ௫௯

என்னவிதமாக வெடுத்துநின்றுடலாம் சிங்கி அது
ஏற்றவுமாற்றவு மிணங்கிநின்றுடிப்பார் சிங்கா ௬0

மாற்றிப்பிடிக்க மருந்தென்னசொல்லடி சிங்கி அது
மாளாமல்மாண்டு மறந்துயிருப்பதே சிங்கா ௬௧

அட்டகெஜங்க ளறிந்திடமெவ்விடம் சிங்கி அது
எட்டுவிதமா யெழுதும்பலனடா சிங்கா ௬௨
உற்றஞானப்பொருளுத்தியாய்ச்சொன்னதார்சிங்கி அது
உற்றமர்பீரு முகம்மதுரைத்தது சிங்கா ௬௩

ஞானரத்தினக்குறவஞ்சி-முற்றிற்று.

---

வள்ளிறசூலுரைத்த வழிமுறைபோல்
தீனோர்கள் மகிழ்ந்தீடேற
வெள்ளவில்லாவழி நான்கினியல்பாலான
சரீஅத்தென்றின் யுற்றோங்குந்
தெள்ளமுத தரீக்கத்துக்கிகத்து
மகுரியத்துத் தெளிவாய்நான்கு
முள்ளடக்கிக் குறவஞ்சி யெனவுரைத்
தார்பீர்முகம்ம தென்னுங்கொண்டல்.

இங்ஙனம்,
யாழ்ப்பாணம்,
பரிகாரி மரைக்காயர் குமாரர்,
பக்கீர்முகியித்தீன்புலவர்.